بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

Reg. No: 333/2003

# TAMIL NADU THOWHEEDH JAMAATH
# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்

HEAD QUARTERS
# 30, Armenian Street, Mannady,
Chennai - 600 001.

Date:19.12.2013

அபூ அப்துல்லாஹ் அவர்களுக்கு,

அஸ்ஸலாமு அலைக்கும்....

எங்களின் மாநிலத் தலைவருக்கு நீங்கள் எழுதிய 11-12-2013 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றோம். உலகளாவிய முஸ்லிம்கள் பெரும் பிளவு பட்டு வெவ்வேறு நாட்களில் பெருநாள் கொண்டாடுகின்றனர் என்றும் அது வேதனைக்குரியது என்றும் அதில் எழுதி உள்ளீர்கள். இந்த பெரும் பிளவுக்கு சகோ பி.ஜைனுல் ஆபிதீன் அவர்களும் நீங்களும் முரண்படுவது தான் காரணம் என்றும் எழுதியிருந்தீர்கள்.

நீங்கள் உலகப் பெருந்தலைவராக இருக்கலாம். உங்களது கருத்தை ஏற்று உலக முஸ்லிம்கள் பெருநாள் கொண்டாடுபவர்களாக இருக்கலாம். ஆனால் உலக முஸ்லிம்கள் வெவ்வேறு நாட்களில் பெருநாள் கொண்டாடுவதற்கு சகோ பி.ஜைனுல் ஆபிதீன் அவர்கள் காரணம் இல்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களைப்போல அவர் உலகளாவிய பெருந்தலைவர் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சகோ பி.ஜைனுல் ஆபிதீன் அவர்களோடு விவாதம் செய்ய பகிரங்க அழைப்பு பிரசுரங்களை உங்களது உலகளாவிய முஸ்லிம் ஆதரவாளர்கள் மூலம் வெளியிட்டிருப்பதாக உங்கள் கடிதம் மூலமாக அறிகிறோம். எவரை விவாதத்திற்கு அழைக்கிறோமோ அவருக்கு அவ்வழைப்பு அனுப்பப்படவேண்டும் என்ற அடிப்படை விவரம்கூட எங்கள் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சகோதரர்கள் பலர் உங்களுக்கு புத்தி சொன்ன பின்னர் தான் புரிந்துள்ளது என்பதையும் உங்கள் கடிதம் மூலம் அறிகிறோம்.

ஒப்பந்தம் செய்யும் இடத்தையும் தேதியையும் ஒரு தரப்பு முடிவு செய்வது நீதியோ நியாயமோ ஒருபோதும் ஆகாது என்று எழுதியுள்ளீர்கள். அதன் அடுத்த பத்தியிலேயே ஒப்பந்தம் செய்யும் இடத்தையும் தேதியையும் எவ்வாறு நிர்ணயம் செய்வது என்று நீங்களாகவே முடிவு செய்துள்ளீர்கள். இது நீதியோ நியாயமோ ஒருபோதும் ஆகாது என்பது உங்களுக்கு ஏன் புரியவில்லை.

கடிதத்தில் தப்பும் தவறுமாக எழுதிவிட்டு நான் எழுதியதை விவாதிக்காதீர்கள் என்றும் எழுதியுள்ளீர்கள். இதுவும் நீதியோ நியாயமோ ஒருபோதும் ஆகாது என்பது உங்களுக்கு ஏன் புரியவில்லை.

பகிரங்க விவாத அழைப்பு விடும் துணிச்சலுள்ள நீங்கள் நிபந்தனைகளுடன் கூடிய விவாதத்திற்கு அழைக்கவில்லை. நிபந்தனைகளற்ற விவாதத்திற்கே அழைத்துள்ளீர்கள்.



Ph : 044-2521 5226 Fax : 044-2521 5226 Cell : 96771 36262
E-mail : thtjho@gmail.com, www.thtj.net & www.onlinepj.com

ஏனென்றால் ஒத்த கருத்து ஏற்படவும் உலகளாவிய முஸ்லிம் சமுதாய ஒற்றுமை ஏற்படவும் இஃக்லாஸான எண்ணத்திலேயே எழுதியுள்ளீர்கள்.

உங்களுக்கும் உலக முஸ்லிம்களுக்கும் இடையே பிறை விஷயத்தில் மட்டுமல்லாமல் அதை விட முக்கியமான அடிப்படைக் கொள்கைகளிலேயே வேறுபாடுகள் உண்டு.
நிபந்தனையற்ற விவாதம் என்றால் குறிப்பிட்ட தலைப்பைத் தான் விவாதிப்பேன் என்று நீங்கள் நிபந்தனையிட முடியாது.

உங்கள் தரப்பில் எதை விவாதிக்க விரும்புகிறீர்களோ அதை நீங்கள் முடிவு செய்யலாம்; எங்கள் தரப்பில் எதை விவாதிப்பது முக்கியம் என்று நாங்கள் கருதுகிறோமோ அதை நாங்கள் முடிவு செய்வோம்.

ஒப்பந்தத்தின் போது தான் உங்கள் தரப்பில் உள்ள தலைப்புகளையும் எங்கள் தரப்பிலுள்ள தலைப்புகளையும் பேசி விவாதிக்கும் தலைப்புகளை முடிவு செய்ய வேண்டும், இதுதான் சமநிலையாகும்.

சென்னையில் இருக்கும் எங்களுக்கு நீங்கள் விவாத அழைப்பு விட்டுள்ளதால் விவாதமும் ஒப்பந்தமும் சென்னையில் தான் நடக்கவேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே! எனவே சென்னையில் பொதுவான இடத்தில் விவாத ஒப்பந்தம் நடக்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இதை இழுத்தடித்துக் கொண்டு போகக் கூடாது என்பதால் நீங்களே பொதுவான இடத்தை முடிவு செய்து தெரிவித்தால் அதற்காகும் செலவில் சரி பாதியை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். உங்களுக்கு பொதுவான இடம் பிடிக்க வசதியில்லா விட்டால் அந்தப் பொறுப்பை எங்களிடம் நீங்கள் ஒப்படைத்தால் அதில் எங்களுக்கு மறுப்பு இல்லை.
ஒப்பந்தத்திற்கான தேதியை ஜனவரி 3முதல் 20வரையிலான தேதிகளில் ஒன்றை நீங்கள் தேர்வு செய்து எங்களுக்குத் தெரிவிக்கலாம். அல்லது நீங்கள் இதுபோல 15முதல் 20 தேதிகளை எங்களுக்குத் தெரிவித்தால் அதில் ஒரு தேதியை நாங்கள் தேர்வு செய்வோம்.

ஒத்தக் கருத்து ஏற்படவும் உலகளாவிய முஸ்லிம் சமுதாய ஒற்றுமை ஏற்படவும் இஃக்லாஸான எண்ணத்திலேயே எழுதியுள்ளீர்கள். சகோ பி. ஜைனுல் ஆபிதீன் அவர்களோடு மட்டும் விவாதம் செய்து விளம்பரம் தேடிக்கொள்வதோ, வருமானத்தை பெருக்கிக்கொள்வதோ உங்கள் நோக்கமில்லை. நீங்கள் அப்படிப்பட்ட கீழ்த்தரமானவர் இல்லை என்பதை உலகளாவிய முஸ்லிம்கள் புரிந்துகொள்ளட்டும்.

எனவே உங்கள் தகுதி, திறமை, ஆளமான ஆய்வுத்திறன் ஆகியவற்றில் சற்றும் குறையாத, சிறந்த அறிஞர்களைக்கொண்டு உங்களோடு விவாதிக்க நாங்கள் தயார் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.
எங்கள் ஜமாத் மூலம் யார் விவாதித்தாலும் அது பிஜே உள்ளிட்ட அனைவரையும் கட்டுப்படுத்தும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

எனவே வரும் ஜனவரி மாதம் 3ஆம் தேதியிலிருந்து 20ஆம் தேதி வரை உங்களுக்கு இசைவான ஒரு தேதியை வரும் 27-12-2013 குள் எங்களுக்கு தெரியப்படுத்தும்படிக் கேட்டுக்கொள்கிறோம். அல்லது இதுவல்லாத வேறு 15 நாட்களை தெரியப்படுத்தவும்.

"என் ஊருக்கு வா!" என்பது பகிரங்க அறைகூவல் அல்ல.

"உன் ஊருக்கு வருகிறேன், நீ தயாரா?" என்பதுதான் பகிரங்க விவாத அழைப்பு என்பதை நீங்கள் அறிந்துதான் அழைத்துள்ளீர்கள், அதன் அடிப்படையில் விவாத ஒப்பந்தமும், விவாதமும் சென்னையிலேயே நடக்கும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

சென்னையில் ஒப்பந்தம் செய்யும் மண்டபத்தை நீங்களே தேர்வு செய்ய விட்டுவிடுகிறோம், அது பொதுவான இடமாக இருக்க வேண்டும்.

குறிப்பு :

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்தின் விவாத பொறுப்பாளர் என்ற முறையில் பிஜேவின் வழிகாட்டுதலின்படி இக்கடிதத்தை எழுதியுள்ளேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு,

எம்.எஸ்.சையது இப்ராஹீம்

விவாதப் பொறுப்பாளர்